★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 5 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 04 | January 05, Tuesday, 2021 | 16 பக்கங்கள் | 30/-




## நவீனமயப்படுத்தப்பட்ட பிரதமரின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு

### கொள்ளுப்பிட்டியில் பிரதமர் மஹிந்தவால் திறந்து வைப்பு



நவீனமயப்படுத்தப்பட்ட பிரதமரின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு நேற்று (04) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி மெல் மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது. மஹா சங்கத்தினரின் பிரித் பாராயணத்தை தொடர்ந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், மங்கள விளக்கேற்றி பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிகளை சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தார். கொழும்பு 03, கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி மெல் மா

## காலி முகத்திடல் நகர பூங்கா பொதுமக்களிடம் கையளிப்பு



### சுபீட்சத்தின் நோக்கை யதார்த்தமாக்கும் ஜனாதிபதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்புரையின் பேரில் ... பாலதக்ஷ மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள நகர வன பூங்கா கடந்த 30 ஆம் திகதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டது. "சுபீட்சத்தின் நோக்கு" நிகழ்ச்சித் திட்டத்தை யதார்த்தமாக்கும் வகையில் பொதுமக்களின் ஓய்வு, மகிழ்வளிப்பை கருத்திற் கொண்டு 06




### நடுத்தர வருமானம் பெறு...

# 5000 வீடுகளை ... அரசின் திட்டம் நேற்று ஆரம்பம்

### 40 பில்லியன் ரூபா செலவில் முதற்கட்டமாக 3,000 வீடுகள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5,000 வீடுகளை நிர்மாணிக்கும் அரசாங்கத்தின் செயற்திட்டம் நேற்று கொழும்பில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கமைய நிரந்தர வீட்டு வசதிகள் இல்லாத நடுத்தர குடும்பங்களை கவனத்திற் கொண்டு இந்த வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் கொழும்பு ஊறுகொட வத்த பிரதேசத்தில் 06

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இன்று வருகிறார்

### ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டமைச்சரை சந்திப்பார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வருகிறார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பிற்கிணங்க இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் 07ஆம் திகதி வரை தங்கியிருப்பாரென வெளிவிவகார 06

## புதுவருடத்திற்கான பாடசாலைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பம்

### மேல்மாகாணம் தவிர்ந்த பாடசாலைகள் 11இல் தொடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் 11ஆம் வகுப்புக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் எதிர்வரும் 11ஆம் திகதி திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 06

## மாளிகாவத்தை பிரதேசம் நேற்று முதல் விடுவிப்பு

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தேசிய வீடமைப்பு குடியிருப்புத் தொகுதி நேற்று (04) விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதியை உடன் அமுலுக்கு வரும் வகையில் விடுவிப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் 06

## ஜனவரி 22 முதல் விமான நிலையங்கள் திறப்பு

### அமைச்சர் நிமல்லான்சா தெரிவிப்பு



வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்காக ஜனவரி 22ஆம் திகதி தொடக்கம் விமான நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் 06

## தகன பிரச்சினை குறித்து எந்த குழுவையும் அரசு நியமிக்கவில்லை

### சமூகவலைத்தள செய்திகளில் உண்மையில்லை



கொரோனாவினால் உயிரிழந்தவர்களை தகனம் செய்வது தொடர்பான விவகாரத்தில் பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நியமிப்பது குறித்து வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லையென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை தகனம் செய்தல் அல்லது அடக்கம் செய்வது குறித்து ஆராய்வதற்கு ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, குழு ஒன்றை நியமித்துள்ளதாக செய்திகள் வெளியாகி யிருந்தன. 06

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



2021ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று நடைபெறும். அதன் பிரகாரம் புத்தாண்டில் பாராளுமன்ற அமர்வுகளை இன்று முதல் ஆரம்பிக்க சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார். பாராளுமன்றத்தின் அனைத்து திணைக்களங்களும் 06

## அபிவிருத்தி கலந்துரையாடலில் TNA எம்.பிக்களுக்கு பாரபட்சம்

### மட்டு.எம்.பி கோவிந்தன் கருணாகரம் கவலை

### 60 கோடி ரூபா பெறுமதியான

## 180 கிலோ போதைப் பொருட்கள் கடற்படையினரால் கைப்பற்றல்

### தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில்

## ஜனாதிபதியிடம் மனோ அவசர கோரிக்கை

## கோப் குழுவின் முன் 05 அரச நிறுவனங்கள்

### ஜனவரிக்குள் பரிசீலனைக்கு எடுப்பு